Registered as a Newspaper     பக்கங்கள் 04     விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM     மக்கள் தினசரி     Peoples Daily

நாதம் 04     திருவள்ளுவர் ஆண்டு 2024     ஆவணி 16     [01-9-1993]     புதன்கிழமை     ஓசை 195

## 1வயதுக்குமேற்பட்டகுழந்தைக்குஉகந்தது பால்மா விளம்பரங்களில் குறிக்கப்படும்

குழந்தைகளுக்கான பால்மா விளம்பரங்களில் அவை ஒரு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே உகந்தது என்பதைக் குறிப்பிடுவது உறுதிப்படுத்தப்பட வேண்டுமென இதற்குப் பொறுப்பான சகல அமைப்புகளும் கேட்கப்பட்டுள்ளன. கைக் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுப்பதனை முன்னேற்றும் நோக்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு இசைவாகவே இந்த உடன்படிக்கை அமுல் செய்யப் படுவதைக் கண்காணிப்பதற்கான குழு இவ் வேண்டுகோளை சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கு விடுத்துள்ளது. பல்வேறு சர்வதேச மற்றும் தேசிய அமைப்புகளின் ஆதரவுடன் சுகாதார அமைச்சு ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தாய்ப்பால் வழங்கப்படுவதை ஊக்குவித்து பாதுகாக்கும் நோக்கத்துடன் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்த உடன்படிக்கை அமுல் செய்யப்படுவதனைக் கண்காணிப்பதற்கான குழுவின் கடைசிக்கூட்டத்தில் ஒரு வயதுக்குட்பட்ட (4 ஆம் பக்கம் பார்க்க)

## ..ாகி திலீபன் 6ஆம் ஆண்டு ..நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

..கி திலீபனின் ஆறாவது நினைவு கூரல் நிகழ்வு ..ற்பாடு செய்வதற்கான ..ள் மேற்கொள்ளப் ..ருகின்றன. கோட்ட வட்ட மட்டங்களிலும் .. மட்டத்திலும் இதற் ..ற்பாடுகள்ய ·வும் மேற் ..ப்படுகின்றன. ..மாதம் பதினைந்தாம் ..தல் இருபத்தைந்தாம் திகதி வரையிலான பதினொரு நாட்களிலும் வட்ட மட்டத்தில் பொதுப்பந்தல்கள் அமைத்து தியாகி திலீபனின் உருவப்படம் வைத்து ஈகச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தவும் உண்ணாவிரதம் இருக்கவும், அஞ்சலிக் கூட்டங்கள் நடத்தவும ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கூடியசோடனைகளால் அதிக செலவு ஏற்படு (3ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவச் செலவீட்டை சமாளிக்க கல்விக்கான ஒதுக்கீட்டில் வெட்டு?

## உலக வங்கியின் தனியார் மயமாக்கும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த முயற்சி

(கொழும்பு)

அதிகரித்து வரும் இராணுவச் செலவீட்டை சீர் செய்யும் வகையிலும், உலகவங்கி மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களின் நெருக்குதல்கள் காரணமாகவும் பாடசாலை, பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றை தனியார் மயமாக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது. இதற்குஏற்றாப் போல், பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் எண்ணிக்கையையும் குறைக்கத் திட்டமிட்டுள்ளது.

அதிகரித்துவரும் இராணுவச் செலவீட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யும் பொருட்டு அரசாங்க செலவீனங்களில் பத்து வீதத்தை வெட்டுவதற்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க ஏற்கனவே அறிவித்திருந்தார். இருப்பினும், இராணுவச் செலவீட்டை ஈடுசெய்வது சிரமமாகவே உள்ளது.

இதேவேளை சர்வதேச நிதி நிறுவனங்கள் பொதுச் செலவீனங்களைக் குறைக்குமாறும், தனியார் மயமாக்கலை ஊக்குவிக்குமாறும் அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து வருகின்றனர்.

இந் நிலையில் அரசாங்கம் கணிசமான தொகையைச் செலவீடு செய்யும் கல்வி, சுகாதாரம் ஆகியவற்றிற்கு செலவிடும் தொகையை மட்டுப்படுத்த அல்லது மிகவும் குறைத்துவிட நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது.

பல்கலைக்கழகங்களைத் தனியார் மயமாக்கல் குறித்து அண்மையில் ராஜகிரிய சுதேச மருத்துவக்கல்லூரியில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் எச்சரித்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய இணைப்பாளர் எஸ் அழககோன் உலக வங்கியின் வழிகாட்டலின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களையும், பாடசாலைகளையும் தனியார் மயமாக்க அரச முயற்சிக்கின்றது என்றார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பல்கலைக்கழகச் சட்டத்துக்குத் திருத்தம் கொண்டுவந்து பல்கலைக்கழகங்களுக்குச் சுதந்திரம் வழங்குவதென்ற போர்வையில் துணை வேந்தர்கள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பல்கலைக் கழகம் பராமரிப்பை பல்கலைக் கழகங்களுக்குக் கையளிப்பதன் மூலம் அரசு [3ஆம் பக்கம் பார்க்க]


## மருத்துவ பீட அனுமதியை குறைக்க மானியகுழு முடிவு

[கொழும்பு]

மருத்துவ பீடத்துக்கு அனுமதிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும்படி பல்கலைக் கழக மானியங்கள் குழு பல்கலைக் கழகங்களைப் பணித்துள்ளது.

பல்கலைக் கழகங்கள் மருத்துவ பீடத்துக்குக் கண்மூடித்தனமாக மாணவர்களை அனுமதிப்பதால்தான் பிரச்சினை கொழும்பு பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீடங்களில் மாணவர்கள் மிதமிஞ்சி இருப்பதாகவும், சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மருத்துவக் கற்கை நெறியிலும் இதே நிலை நீடிப்பதாகவும் கூறப்படுகிறது.

இதே வேளை, பல்கலைக் கழக மானியங்கள் குழுவின் திட்டத்துக்கு அமைவாக மருத்துவ பீட அனுமதிக்கான மொத்தப் புள்ளி அதிகரிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.



சிறிலங்கா கடற்படையினரின் சுப்பர் டோறா ரோந்துப் படகை தகர்த்தெறிந்து வீரகாவியம் படைத்த கடற் கரும்புலிகளான மேஜர் புகழரசன், கப்டன் மணியரசன் ஆகியோரது உருவப்படங்கள் மக்கள் அஞ்சலிக்காக ஊர்தியில் எடுத்துச் செல்லப்படுகையில் எடுக்கப்பட்ட படம்.


## மாவீரர் உருவப்படங்களுக்கு வழிநெடுகிலும் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

வடமராட்சியில் சிறிலங்கா ... ஆகியபகுதிகளூடாக பலமைல்கள் ஊர்வலமாக சென்றது.

## வீரச்சாவு





சிறிலங்கா கடற்படையினரின் சுப்பர் டோறா ரோந்துப் படகை தகர்த்தெறிந்து வீரகாவியம் படைத்த கடற் கரும்புலிகளான மேஜர் புகழரசன், கப்டன் மணியரசன் ஆகியோரது உருவப்படங்கள் மக்கள் அஞ்சலிக்காக ஊர்தியில் எடுத்துச் செல்லப்படுகையில் எடுக்கப்பட்ட படம்.

ஈடு செய்யும் பொருட்டு அரசாங்க செலவினங்களில் பத்து வீதத்தை வெட்டுவதற்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க ஏற்கனவே அறிவித்திருந்தார். இருப்பினும், இராணுவச் செலவீட்டை ஈடுசெய்வது

நிறுவனங்கள் பொதுச் செலவினங்களைக் குறைக்குமாறும், தனியார் மயமாக்கலை ஊக்குவிக்குமாறும் அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து வருகின்றனர்.

இந்நிலையில் அரசாங்கம் கணிசமான தொகையைச்

விடும் தொகையை மட்டுப்படுத்த அல்லது மிகவும் குறைத்துவிட நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது.

பல்கலைக்கழகங்களைத் தனியார் மயமாக்கல் குறித்து பத்திரிகையாளர் மாநாட்டில் எச்சரித்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய இணைப்பாளர் எஸ் அழகக்கோன் உலக வங்கியின் வழிகாட்டலின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களையும், பாடசாலைகளையும் தனியார் மயமாக்க அரச முயற்சிக்கின்றது என்றார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், பல்கலைக்கழகச் சட்டத்துக்குத் திருத்தம் கொண்டுவந்து பல்கலைக்கழகங்களுக்குச் சுதந்திரம் வழங்குவதென்ற போர்வையில் துணை வேந்தர்கள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பல்கலைக் கழகம் பராமரிப்பை பல்கலைக் கழகங்களுக்குக் கையளிப்பதன் மூலம் அரசு

[3ஆம் பக்கம் பார்க்க]

# மருத்துவ பீட அனுமதியை குறைக்க மானியகுழு முடிவு

[கொழும்பு]

மருத்துவ பீடத்துக்கு அனுமதிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும்படி பல்கலைக் கழக மானியங்கள் குழு பல்கலைக் கழகங்களைப் பணித்துள்ளது.

பல்கலைக் கழகங்கள் மருத்துவ பீடத்துக்குக் கண்மூடித்தனமாக மாணவர்களை அனுமதிப்பதால்தான் பிரச்சினைகள் ஏற்படுவதாகவும், சமாளிக்கக் கூடிய தொகை மாணவர்களை அனுமதிப்பதன் மூலம் பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் அதிகாரிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

அதிகளவில் மாணவர்களை அனுமதிப்பதன் மூலம் பல்கலைக் கழக மானியங்கள் குழு வழங்கும் நிதி ஒதுக்கீடு போதாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீடங்களில் மாணவர்கள் மிதமிஞ்சி இருப்பதாகவும், சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மருத்துவக் கற்கை நெறியிலும் இதே நிலை நீடிப்பதாகவும் கூறப்படுகிறது.

இதே வேளை, பல்கலைக் கழக மானியங்கள் குழுவின் திட்டத்துக்கு அமைவாக மருத்துவ பீட அனுமதிக்கான வெட்டுப்புள்ளி அதிகரிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

# மாவீரர் உருவப்படங்களுக்கு வழிநெடுகிலும் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

வடமராட்சியில் சிறிலங்கா கடற்படையின் டோறா படகை தகர்த்த இரு கடற் கரும்புலிகளுக்கும் நேற்று மக்கள் தமது உணர்வுபூர்வ அஞ்சலியை செலுத்தினர். குடாநாடு எங்கும் கடற்கரும்புலிகளான மேஜர் புகழரசன், கப்டன் மணியரசன் ஆகியோரது உருவப்படங்களை தாங்கிய ஊர்தி ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

இவ் வூர்தி வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகியபகுதிகளூடாக பவனியாக ஊர்வலமாக சென்றது. ஊர்தி சென்ற இடமெங்கும் மக்கள் வழிநெடுகநின்று தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர். வீதி எங்கும் கறுப்புக் கொடிகளும் தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. வலிகாமம் பிரிவில் சுன்னாகத்தில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து ஊர்தி கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு சென்றது. அங்கு நினைவுக்கல்

(3ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



கப்டன் இரும்பொறை

யாழ் மாவட்டத்தில் நேற்று ஏற்பட்ட விபத்து ஒன்றில் விடுதலைப்புலிகளின் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த கப்டன் இரும்பொறை (இராசையா ஜெகதீஸ்வரன் ஸ்ரேசன் டி. கோண்டாவில், யாழ்ப்பாணம்) இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

# உதவிப்பொருள்விநியோகம் பாரபட்சம்எனப் புகார்

(மல்லாகம்)

இராணுவ அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து உடுவில் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முகாம்களில் வாழும் பெருமளவான மக்களுக்கு அண்மையில் தொண்டர் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட உதவிப் பொருள்கள் சீராக கிடைக்கவில்லை என புகார் செய்யப்பட்டுள்ளது. 1991ஆம் ஆண்டளவில் உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டது என காரணம் கூறப்பட்டு உதவிப் பொருள்களை வழங்க மறுத்ததாக மேற்படி தொண்டர் நிறுவனம் மீது மக்கள் பெரிதும் வேதனையடைந்திருப்பதாக அம் முகாம்களில் வாழ்வோர்

(3ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார் கஜுவத்தை முகாம் வாபஸ் பெறப்பட்டது

(மன்னார்)

மன்னார் பெருநிலப்பரப்பில் முந்திரிகைத் தோட்டம் (கஜுவத்தை) பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரும் முகாமை விட்டு பின்வாங்கிச் சென்று விட்டனர்.

மன்னார் பெருநிலப்பரப்பில் தமதுகட்டுப்பாட்டின் கீழிருந்த சுமார் 20 சதுர கிலோமீற்றர் பரப்பளவை ஏற்கனவே படையினர் கடந்த 15 ஆம் திகதி கைவிட்டு பின்வாங்கிச்சென்று விட்டமை தெரிந்ததே. பின்வாங்கிச்சென்ற படையினர் தற்போது தள்ளாடி, வங்காலை முகாம்களில் தங்கியுள்ளனர்.

தள்ளாடியையும் வங்காலையையும் சுற்றியுள்ள பாலைகுழி, அடம்பன், நானாட்டான், உயிலங்குளம், சூரியகாடு, முதலைக்குத்தி போன்ற பகுதிகளில் இருந்து படையினர் அப்பகுதிகளில் தாம் அமைத்திருந்த முகாம்கள், நூற்றுக்கணக்கான காவலரண்கள் என்பனவற்றை கைவிட்டு இம்மாத நடுப்பகுதியில் வாபஸ் பெற்றனர். இதன் காரணமாக மன்னார் பெருநிலப்பரப்பிலிருந்த இராணுவ வேலியும் இல்லாதொழிக்கப்பட்டது. இந்நிலையில் மன்னார் பகுதியில் இருந்த கஜுவத்தை முகாமிலிருந்தும்படையினர் வெளியேறியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தப்பியோடிய சிப்பாய் துப்பாக்கியுடன் கைது

[மாத்தறை]

சிறிலங்கா இராணுவத்திலிருந்து தப்பிஓடி கொள்ளைகளில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் ஆயுதத்துடன் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக பொலிசாரால் தேடப்பட்டு வந்த மேற்படி நபர் யாலதேசிய வனக்காட்டில் பதுங்கியிருந்த போதே திஸ்ஸமஹராமை பொலிசாரால் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார்.

இராணுவத்திலிருந்து தப்பி வந்து ஜே.வி.பி. இயக்கத்தில் சேர்ந்து கொள்ளைக் கோஷ்டி ஒன்றுக்குத் தலைமை தாங்கி வந்த இவரிடமிருந்து ரி-56 தன்னியக்கத் துப்பாக்கி ஒன்றையும் 26 தோட்டாக்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கி இராணுவத்திலிருக்கும் இவரது சகபாடி ஒருவரிடமிருந்து 50 ஆயிரம் ரூபாவுக்கு வாங்கப்பட்டதென விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

## பருத்தித்துறை துறைமுகத்தில்

# பொருள்கள் இறக்குதல் இன்று ஆரம்பமாகும்

பருத்தித்துறை இறங்கு துறையில் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் மீண்டும் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடற்படையினரின் விசைப்படகு தகர்க்கப்பட்டதையடுத்து இத்துறைமுகத்தில் தரித்து நின்று பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த 'வாதுவ' கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு சென்றிருந்தது. மா மூடைகளை அரைகுறையாக இறக்கிச்சென்ற 'வாதுவ'

[3ஆம் பக்கம் பார்க்க]

# மட்டக்களப்பில் தாக்குதல் சிப்பாய் பலி; ஆயுதம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உணவு எடுத்து வந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற திடீர் மோதலின் போது ஒரு இராணுவச்சிப்பாய் கொல்லப்பட்டதுடன் அவரது ஆயுதமும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் பழுகாமம் சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நாவற்குடா பிரதான வீதிவரை காவலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினருக்கு பழுகாமம் முகாமிலிருந்து உணவு எடுத்து வந்த இரு இராணுவ சிப்பாய்களை விடுதலைப் புலிகள் எதிர்பாராத விதமாக சந்தித்தனர்.

இதன்போது ஏற்பட்ட திடீர் மோதலின்போதே சிப்பாய் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரிடமிருந்த ரி 56-1, ரவைக்கூடு-01, நடுத்தரரவைகள் 30 ஆகியன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## ஐரோப்பாவில்தொண்டமான் புலிகளைச்சந்தித்தார்

டெய்லி நியூஸ் செய்தி

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமான் அண்மையில் பாரிஸ், லண்டன் ஆகிய நகரங்களில் விடுதலைப் புலிகள் இயக்க பிரமுகர்களுடன் நடத்தியபேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப்புலிகளால் அமைதித்திட்டம்ஒன்று தொண்டமானிடம் வழங்கியதாக டெய்லிநியூஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இனப்பிரசினை தீர்வு குறித்து புதிய முயற்சிகளுக்காக புலிகள் பேச்சு நடத்த அமைச்சர் தொண்டமான் பாரிஸ், லண்டன் ஆகிய நகரங்களுக்கு விஜயம் செய்ததாகவும் அப்போது புலிகளுடனான சந்

[3ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் கைதானவர்

# பணம் வழங்கியதையடுத்து விடுதலையானார்

(வவுனியா)

வவுனியாவில்வைத்துதமிழ்க் குழு ஒன்றினால் கைது செய்யப்பட்ட நபர் ஒரு லட்சம் ரூபா தருமாறு மிரட்டப்பட்டு பின்னர் 35,000 ரூபா அவர் வழங்கியதை அடுத்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நெடுங்கேணியைச் சேர்ந்த பசுபதி யோகராசா (வயது22) என்ற இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார். இவர் தடுத்து வைக்கப்பட்ட

(3ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை படகு சிக்கியது

[யாழ்ப்பாணம்]

கல்முனை கடற்பரப்பில் மணல் திட்டியில் சிக்குண்ட இரு கடற்படை படகுகள் பலத்த சிரமத்தின் மத்தியில் கடற்படையினரால் மீட்கப்

[3ஆம் பக்கம் பார்க்க]

# விஞ்ஞான கணித ஆசிரியர் 700 பேர் நியமனமாவர்

(யாழ்ப்பாணம்)

அடுத்த வருடம் ஜனவரியில் இருந்து பாடசாலைகளுக்கு 700 விஞ்ஞான மற்றும் கணித ஆசிரியர்களை நியமிக்க கல்வி, உயர்கல்வி, கலாசார விவகார அமைச்சு அனுமதிவழங்கியுள்ளது.

இதற்கான பணிப்புரையை அமைச்சர் டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டார கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

தற்சமயம் வெளியிடங்களில் உள்ள அநேக பாடசாலைகளில் கணிதம் மற்றும் விஞ்ஞான ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவுள்ளது. இப் பற்றாக்குறையால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனை அடுத்து அமைச்சு இம்முடிவை எடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

## வரி விளம்பரம்


### றெனி முக்குக்கண்ணாடியகம்

உங்கள் கண்களை பரிசோதித்து சரியாக கண்ணாடி வழங்கப்படும் இல, 288, நாவலர் வீதி (யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (5786)

### பதவி வெற்றிடம்

யாழ்நகரின் மத்தியில் இயங்கி வரும் முன்னணி உணவகத்திற்கு மேலைத்தேய கீழைத்தேய, சைனீஸ் உணவுவகைகள் சிற்றூண்டிகள் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்களும், மற்றும் உணவு பரிமாறுவதில் அனுபவம் உள்ளவர்களும் தேவை. நற்சான்றுப் பத்திரங்களின் அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வரவும் தொடர்பு சுவையருவி. யாழ்ப்பாணம். (சி-7292)


### பிருந்தாவன பிரதேசவிழா

சிறிராகவேந்திர சுவாமிகளின் பிருந்தாவன பிரதேச விழா நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நீடிக்கும் இவ்விழாவில் தினமும் பிற்பகல் 4 30 மணிமுதல் 8 00 மணிவரை தெய்வீக இசை விருந்து வழங்கப்படவுள்ளது.

### ஜே ஆர். நிலையம் [கொழும்பு]

கொழும்பு பிமபலை மாவத்தையில் சினேகிதாகரகம் முன்பாக ஜே ஆர். ஜெயவர்தனா கலாசார நிலையம் ஒன்றை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க திறந்துவைக்கவுள்ளார் இங்கு ஜே ஆரின் அரசியல் வாழ்க்கையை நினைவுகளும் சரித்திர ஆவணங்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

### திருமலைக்கு வந்தனர்

தென்னிந்தியாவிலிருந்து மேலும் 1173 இலங்கை அகதிகள் கப்பல் மூலம் நேற்று திருகோணமலைக்கு வந்து சேர்ந்தனர் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய உதவியுடன் மேற்கொள்ளப்படும் நாடு திரும்பும் திட்டத்தில் இதுவரை சுமார் 5640 பேர் இந்த மாதத்தில் மட்டும் வந்துள்ளனர்.


## LONDON EXAMS

MAY / JUNE — 94

| | | COURSE FEES |
|---|---|---|
| C. I. M. A. | (Stage - 1) | 2,250/- |
| I. A. B. | (Foundation) | 600/- |
| I. A. B. | (Intermediate) | 700/- |
| I. A. B. | (Final) | 800/- |

விரிவுரையாளர்கள்: சத்தியதாஸ், இளம்பூர்ணர், சிவபாதசுந்தரம், கேசவன், புஷ்பா

ஆரம்பம் : 05 - 09 - 1993

COMPUTER BASIC LOTUS 1-2 3 SHORT HAND & TYPING வகுப்புகள் உடன் ஆரம்பமாகின்றன.


★ குறைந்த கட்டணம்
★ சிறந்த பெறுபேறுகள்

உறுதியான கல்வியைப் பெற

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3rd CROSS STREET, JAFFNA (சி-7322)

## வெலிங்டன் சந்திக்கருகில்!




# UNIKCO

## COMPUTER CENTRE

Computer பயிற்சிநெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

- BASIC Language (including Graphics Sound & Files)
- PASCAL Language (பல்கலைக்கழகம் செல்ல விரும்புபவர்கட்கு மட்டும்)
- d BASE III PLUS and MS - DOS
- LOTUS 1-2-3 and MS - DOS
- WORD PROCESSING (Word Star Rel. 5.5) and MS - DOS

வார இறுதி வகுப்புக்கள் ஆரம்பம்: 04-09-93 - 10.30 a.m.
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம்: 08-09-93 - 10.30 a.m.

Equipment Used: ACER, ARC Computers. (IBM Compatibles)

மேலதிக விபரங்களுக்கு:

37, CLOCK TOWER ROAD, JAFFNA. (சி-7324)

# 10து ஆண்டின் வெற்றிப்படிகளில் 1983-1993

# செனித் (புதுயுகத்தில் புது உருவம்)

செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்

செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ் ஸ்தாபனத்தின் நிர்வாக இயக்குநர்

பேனா முனையில் இருந்து

அன்புள்ளம் கொண்ட வாடிக்கையாளர்களே! வர்த்தகர்களே! நீங்கள் இல்லையேல் நாங்கள் இல்லை. உங்கள் பேராதரவும் உங்களின் நேசக்கரமும்தான் கடந்த ஒன்பது வருடங்கள் எங்களை முன்னேற்றப் பாதையில் இட்டுச்சென்றது. கடந்த ஒன்பது வருடங்களில் இந்நாட்டு நிலைமை காரணமாக நாம் அனுபவித்த இன்னல்கள் சொல்லிலடங்காது. மேலும் கடந்த ஜூன் 1990இல் ஷெல் தாக்குதலால் எமது ஸ்தாபனம் பலத்த சேதத்திற்குள்ளானதை நீங்கள் அறிவீர்கள் ஆனாலும் ஒரு சிலரின் நேசக்கரங்களால் எமது ஸ்தாபனம் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது. உண்மை, நேர்மை, நாணயம் என்ற கட்டுக்கோப்புக்கிணங்க உள்ளூர் உற்பத்திப் பொருட்களை இன்றும் விநியோகித்து வருகின்றது. மேலும் நாம் விளம்பரத்துறையிலும் எம் வாடிக்கையாளர்களுக்கு நிறைவான சேவையை வழங்கி வருகின்றோம்; எமது அனுபவமிக்க தொழிலாளர்களும், ஊழியர்களும் பரந்த சேவையை மக்களுக்கு மனநிறைவுடன் வழங்கி வருகின்றார்கள். ஆகவே எதிர்வரும் ஆண்டுகளிலும் எமது சேவையை பன்மடங்காக்க உங்கள் ஆதரவையும், அன்பையும் எமக்கு நல்கி நாம் தொடர்ந்து உங்களுக்கு சேவை செய்ய ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றேன்.

நன்றி.

இவ்வண்ணம்
உங்கள் சேவைக்காக காத்திருக்கும்
ஜோ. எகட்டன்
[நிர்வாக இயக்குநர்]

எமது நிர்வாகத்தின்கீழ் இயங்குவது
ஜோ எகட்டனின்
ஜெசித்தாரா
எல்லா வகையான உணவுகளுக்கும்
ஜெசித்தாரா
சுண்டுக்குளி
மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

## ஜெசித்தாரா

### உங்கள் உணவகம்.

இருபது வருடங்களுக்கு மேலாக போசனத் தொழிலில் அனுபவம் பெற்ற சர்வதேச உணவுத் தயாரிப்பாளர் அண்மையில் வெளிநாட்டிலிருந்துதிரும்பியதும் நாம் தரப்போகும்.

## 1-10-1993 முதல் கடல் உணவு வகைகள்

சில்வர் ஸ்ரீக் - Silver Steak: மீன் நண்டு, இறால், கணவாய் மற்றும் கறிக் கலவையுடன் உணவு.

கிறாப் ஸ்ரீக் - Crab Steak : நண்டு சதையில் கறிக்கலவை கலந்த உணவு.

மற்றும் எல்லா விதமான கடல் உணவு வகைகளை உங்கள் விருப்பத்தின் பேரில் 45 நிமிடங்களில் தயாரித்து பெற்றுக் கொள்ளலாம்.

நீங்கள் இதுவென்று பெயரிடுங்கள்-நாங்கள் உங்களுக்கு பெற்றுத் தருவோம்.

1-10-93 முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் நாம் முன்னர் அறிமுகம் செய்த

'தேசியக் கூழ்'

காலை 11 30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை. கலிங்கத்துப் பரணியில் கூழுக்கு இலக்கிய அந்தஸ்து. ஜெசித்தாரா உள்ளூர் உணவகத்தில் கூழுக்கு தேசிய அந்தஸ்து.

உங்கள் தயாரிப்பு பொருட்களை விநியோகம் செய்வதிலும் விற்பனை செய்வதிலும் சிரமம் இருக்கின்றதா? எங்கள் விளம்பர - விநியோக சேவையை நாடுங்கள்.

மற்றவர்கள் உறுதி அளிப்பதை நாங்கள் முடித்து வைக்கின்றோம்.

எம்மைப் பற்றி அறிய வேண்டுமானால் நேரில் தொடர்பு கொள்ளுங்கள்.

ஜோ எகட்டன் [அல்லது அவரது முகாமையாளர்] செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ் 19/3, கொழும்புத்துறை வீதி. (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை) சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் [எமக்கு நிச்சயமாக யாழ் நகரிலோ, தலைநகரிலோ வேறு கிளைகள் கிடையாது]

முக்கிய குறிப்பு:

எமது ஸ்தாபனத்தின் முக்கியமூலதனம் கடின உழைப்பு, எமது ஊழியர்கள் ,எப்போதுமே சோர்வடைவதில்லை

### எமது முக்கிய இலட்சியங்கள்

★ உள்ளூர் உற்பத்திப் பொருட்களை முன்னேற்றும் நோக்குடன் குறைந்த செலவில் சிறிய விளம்பரங்களை அறிமுகப் படுத்துவது.

★ சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்பில்லாமலிருக்கும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை தரமானவையாயின் அவற்றிற்கு 50 வீதம் நிதியுதவி செய்து சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்பை ஏற்படுத்துவது.

★ எமது பாரம்பரிய உள்ளூர் விளைவான பனையில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு முன்னுரிமை கொடுப்பது.

★ விளம்பரத்துறையில் சிறிய அளவில் செய்யப்படும் உள்ளூர் உற்பத்தியாளருக்கும் விநியோகத்தருக்கும் கடனடிப் படையில் விளம்பரம் செய்வது. விபரங்களுக்கு நேரிலோ அல்லது சுயமுகவரி எழுதப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடிதவுறை அனுப்பினால் விபரம் அனுப்பி வைக்கப்படும்.

எங்கள் எண்ணம் உங்கள் எண்ணமல்ல! எங்கள் வழி உங்கள் வழியல்ல,

எங்கள் வழி தனி வழி.

ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்
அன்ட்
அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
19/3, கொழும்புத்துறை வீதி,
(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை.)
சுண்டிக்குளி.

## வாத்சலிய வாழ்த்துக்கள்

மருந்து வகைகளை விற்பனை செய்வதில் பலகாலம் புகழ் பெற்றவர்கள்

## பரணி மருந்துச் சாலை

456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

எமது மலருக்கு புத்துணர்வு ஊட்டியவர்கள்

எமது நன்றிகள் இவர்கட்கு

விளம்பர அமைப்பு:


ஜோ. எகட்டன்
செனித்
(சி-7329)


## நினைவு கூருகின்றோம்...

1993-09-01

அனங்கன்/சிங்கம் (சந்தையா சிங்கராசா - 12,டிபோக புரம், மல்லாவி - மாங்குளம்)

மன்மதன் [— — வவுனியா]



## COMPUTER CENTRE

Computer பயிற்சிநெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

- BASIC Language (including Graphics Sound & Files)
- PASCAL Language (பல்கலைக்கழகம் செல்ல விருப்பவர்கட்கு மட்டும்)
- d BASE III PLUS and MS - DOS
- LOTUS 1-2-3 and MS - DOS
- WORD PROCESSING (Word Star Rel. 5.5) and MS - DOS

வார இறுதி வகுப்புக்கள் ஆரம்பம்: 04-09-93 - 10.30 a.m.
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம்: 08-09-93 - 10.30 a.m.

Equipment Used: ACER, ARC Computers. (IBM Compatibles)

மேலதிக விபரங்களுக்கு:

37, CLOCK TOWER ROAD, JAFFNA.

(சி-7324)

---

மனைப் பொருளியலும் கைத்திறனும்
மகளிருக்கான

## டிப்ளோமா பயிற்சி நெறி

- ★ கேக் ஐசிங்
- ★ உணவு தயாரித்தல்
- ★ உடை தயாரித்தல்
- ★ கை வேலை
- ★ பூ வேலை

பயிற்சிக் காலம் 6 மாதங்கள்

- மேற்படி பயிற்சிகள் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம் வகுப்புக்கள் நடைபெறும்.
- பயிற்சியின் முடிவில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.
- கிழமை நாள் பிரிவினர்க்கான பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் காலை 9. 00 மணி முதல் பிற்பகல் 1 00 மணி வரை நடைபெறும்.
- சனி, ஞாயிறு பிரிவினர்க்கான பயிற்சிகள் காலை 9. 00 மணி முதல் பிற்பகல் 2 00 மணிவரை நடைபெறும்.
- இப்பயிற்சிக்கான விண்ணப்பப்படிவத்தை நேரில் வந்து பெற்று பூர்த்தி செய்யவும்.

புதிய சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 05.09.1993
புதிய கிழமை நாள் பிரிவுகள் ஆரம்பம்: 06.09.1993

## கலாலயா

(தொழிற் பயிற்சியகம்)

விக்டோரியா வீதி,
யாழ். நகர்
[ஆஸ்பத்திரியின் பின்புறம்]

(சி/7290)

---

எமது நிர்வாகத்தின் கீழ் இயங்குவது
ஜோ எகட்டனின்
ஜெசித்தாரா
எல்லா வகையான உணவுகளுக்கும்
ஜெசித்தாரா
கண்டுக்குளி
மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
கண்டுக்குளி.

### ஜெசித்தாரா

உங்கள் உணவகம்.

இருபது வருடங்களுக்கு மேலாக போசனத் தொழிலில் அனுபவம் பெற்ற சர்வதேச உணவுத் தயாரிப்பாளர் அண்மையில் வெளிநாட்டி லிருந்துதிரும்பியதும் நாம் தரப்போகும்.

தலைநகரிலோ வேறு கிளைகள் கிடையாது]

முக்கிய குறிப்பு:

எமது ஸ்தாபனத்தின் முக்கியமூலதனம் கடின உழைப்பு, எமது ஊழியர்கள் ,எப்போதுமே சோர்வடைவதில்லை

எமது முக்கிய இலட்சியங்கள்

- ★ உள்ளூர் உற்பத்திப் பொருட்களை முன்னேற்றும் நோக்குடன் குறைந்த செலவில் சிறிய விளம்பரங்களை அறிமுகப் படுத்துவது.
- ★ சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்பில்லாமலிருக்கும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை தரமானவையாயின் அவற்றிற்கு 50 வீதம் நிதியுதவி செய்து சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்பை ஏற்படுத்துவது.
- ★ எமது பாரம்பரிய உள்ளூர் விளைவான பனையில் இருந்து உற்பத்தி

---

பலகாலம்
புகழ் பெற்றவர்கள்

## பரணி மருந்துச் சாலை

456, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

எமது மலருக்கு புத்துணர்வு ஊட்டியவர்கள்
எமது நன்றிகள் இவர்கட்கு

விளம்பர அமைப்பு:
ஜோ. எகட்டன்
செனித்

(சி-7329)

---

## நினைவு கூருகின்றோம்...
## 1993-09-01

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா காவல்துறை அதிரடிப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 03 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு திருமலை - கன்னியா வெந்நீரூற்று அருகில் சிறிலங்கா இராணுவத்தினரின் கண்ணிவெடியில் சிக்கியதில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1989ஆம் ஆண்டு மணலாறு - குமுழமுனைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த-

2-ம் லெப். கலியுகன் (பொன்னுத்துரை தங்கத்துரை - தம்பலகமம் - திருமலை)
2 ம் லெப். லுக்மன்/சலமோன் (இராமலிங்கம் ரவிகாந் - சின்னக்கரிசல் - மன்னார்)
லெப். ரஜிவன் (தம்பிராசா சுதாகரன் - அச்சுவேலி வடக்கு - யாழ்)
தீவகன் (சாமிலிங்கம் பிரபாகரன் - திருநெல்வேலி-யாழ்)

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

கபிலதேவ் (வைரமுத்து கமலநாதன் - 1-ம் குறிச்சி, பழுகாமம்-மட்டு)
நிக்கலஸ் (கனகரட்ணம் விஜயன்- ஏறாவூர் - மட்டு)
ஜலீம் (முகமது இஸ்மாயில் மன்சூர் - இல, 20, ஏறாவூர்-மட்டு)
கலீல் (— வாசு - 49, காதர் வீதி, ஏறாவூர் - மட்டு)
சுந்தர் (இத்திரவேல் கஜேந்திரராசா - 5-ம் வட்டாரம், சம்பூர் - திருமலை)
நிக்கலஸ் (நாகராசா சங்கர் - 1-ம் வட்டாரம், கிண்ணியா - திருமலை)
ரஜனி (முத்துவேல் சௌந்தரராசன் - 6-ம் வட்டாரம், மூதூர்- திருமலை)
விங்கேஸ் (வெள்ளைத்தம்பி சதீஸ்குமார் -6-ம்வட்டாரம், சாம்பல்தீவு - திருமலை)
சிவராஜ் (தங்கத்துரை அன்ரனிதாஸ் - பீலியடி, கிண்ணியா - திருமலை)
சாள்ஸ் (வேலுப்பிள்ளை சந்தசாமி - இல 89, பாரதிபுரம், மூதூர் - திருமலை)
சர்வேஸ் (ம. ரவிச்சந்திரன் - சாம்பல் தீவு - திருமலை)
சிறி (செல்வநாயகம் புனிதராசா - ஆசிரேஸ் சதுக்கம் - உவர்மலை - திருமலை)
ரவி (— உடையார்கட்டு - முல்லைத்தீவு)
அமலன் (சிவலிங்கம் சரத்சந்திரன் - குமுழமுனை - மணலாறு)
பிரேமசிறி (சதாசிவம் கோணேஸ்வரன் - ஒதியமலை, நெடுங்கேணி - மணலாறு)
நேசன் (பொன்னுத்துரை கனகரத்தினம் - 12 ம் கட்டை, விசுவமடு - முல்லைத்தீவு)
சர்வேஸ் (அருணாசலம் முருகன் - 261, கறுப்புள்ளியான், வவுனிக்குளம் - மாங்குளம்)
அனங்கன்/சிங்கம் (கந்தையா சிங்கராசா - 12,டி யோகபுரம், மல்லாவி - மாங்குளம்)
மன்மதன் (— — வவுனியா)
சுகுமார் (வீரன் அருணதேவன் - கல்மடு - வவுனியா)
மேஜர் ரட்ணம் (சுப்பிரமணியம் யோகலிங்கம்- ஊரியான், முரசுமோட்டை - கிளிநொச்சி)
லெப். கரன் (தெய்வேந்திரம் சுதர்சிங்கம் - 2-ம்படிவம், 115-ம்கட்டை-கிளிநொச்சி)
லெப். அகிலன் (பொன்னுத்துரை நற்குணேஸ்வரன் - உதயநகர் கிழக்கு - கிளிநொச்சி)
2-ம் லெப். கனோஜி (பாலகிருஷ்ணன் கமலநாதன் - புளியம்பொக்கணை- கிளிநொச்சி)
நிக்கலஸ் (சிவஞானம் சுரேஸ்குமார் - இரத்தினபுரம் - கிளிநொச்சி)
2-ம் லெப்.அசோக் (மகாலிங்கம் இதயச்சந்திரன் - ஓடைமடம் -யாழ்ப்பாணம்)
ஆண்டவன் (சிலுவைராசா ஜெயபாஸ்கரன் - மல்லம், உடுவில் - சுன்னாகம்)
குழந்தை (யோன்ரட்ணம் அல்பிரட் பாலசிங்கம் -மயிலங்கூடல் - இளவாலை - யாழ்)
றனிஸ் ரனில் (சிவலோகநாதன் சுஜிகரன் - இல. 05, கல்வியங்காடு - யாழ்)
அசோக் (பாலச்சந்திரன் நதீந்திரன் - அளவெட்டி தெற்கு - யாழ்)

திருமலை - அல்லை, கந்தளாய் வீதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

கப்டன் பேனாட் (சாமிக்குட்டி இரத்தினசபாபதி - புதுக்குடியிருப்பு, தம்பலகமம்- திருமலை)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மயிலம்பாவெளியைச் சேர்ந்த தமிழ் இளைஞன். வாழைச்சேனை இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

குரு (வைத்திலிங்கம் வசிகரன் - முத்தர்வளவு, குப்பிளான் - யாழ்)

1992ஆம் ஆண்டு அம்பாறை - காரைதீவு இடம்பெயர்ந்தோர் முகாமிலிருந்து தொழில் மற்றும் பல்வேறு காரணங்களுக்காகச் சென்று காணாமல் போன 16 தமிழர்கள்.

அம்பாறை - சாய்ந்தமருதுப் பகுதியில் குண்டு வெடிப்பில் பலியான 22 பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-7320)

நல்லூர் இளைஞர் நூலகம்
... மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

தேநீர்க் கோப்பையின் விளிம்பிற்கும், உதட்டிற்கும் இடையில்கூட தேநீர் சிந்திவிடுவதற்கு பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

- ஆங்கிலப் பழமொழி

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 01-09-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

# 15 வருடங்களின் பின்னும் தமிழ்மொழி அமுலாக்கம்?

இலங்கையில் இடம்பெறும் இனப்பிரச்சினை குறித்து சிறிலங்கா அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாடு விநோதமானது. அதேவேளை, முரண்பாடானதும் கூட. இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணும் நோக்கில் சர்வகட்சி மாநாடு, இந்திய-சிறிலங்கா சமாதான உடன்பாடு, பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமனம் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கும் சிறிலங்கா அரசாங்கம், திடீரெனத் தனது நிலைப்பாட்டை மாற்றி இனப்பிரச்சினையை வடக்கு - கிழக்குப் பிரச்சினை என்றும், அங்கு உள்ள பிரச்சினை இனப்பிரச்சினை அல்ல, பயங்கரவாதப் பிரச்சினையே, என்றும், அதற்கு 'ஒரே தீர்வு இராணுவத் தீர்வு மட்டுமே' எனவும் தெரிவிப்பது உண்டு.

இவ்வாறாக முன்னுக்குப் பின் முரண்பாடான போக்கைக் கடைப்பிடிக்கும் சிறிலங்கா அரசாங்கம் அடிக்கடி கூறிவரும் மற்றொரு விடயம், இலங்கைத் தமிழரின் ஒரே பிரச்சினையான மொழிப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது என்பதே ஆகும். அதாவது 1978ஆம் ஆண்டு தமிழுக்கு தேசிய மொழி அந்தஸ்து வழங்கப்பட்டதன் மூலம் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது என்பதே ஆகும். இதனை அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா முதல் தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா வரை தெரிவிக்கின்றனர்.

ஆனால், தமிழரின் தேசிய இனப்பிரச்சினை என்பது சிங்கள ஆட்சியாளர்கள் கூறுவதுபோன்று ஒரு மொழிப் பிரச்சினையல்ல, அது ஓர் இனத்தின் பிரச்சினை. ஓர் இனத்தின் தாயகத்தோடும் அதன் மொழி, கலை, பண்பாடு போன்ற மூலக் கூறுகளோடும் மற்றும் சுதந்திரம், பாதுகாப்பு ஆதாவது வற்றோடும் தொடர்புடையன ஆகும். இதில் மொழி என்பது தமிழ்த் தேசியத்தின் ஓர் அலகே ஒழிய பிரச்சினையின் மொத்த வடிவமும் அல்ல.

இதில், இனப்பிரச்சினை என்பது தனியாக மொழி அல்ல என்பது ஒருபுறம் இருக்க, அரசாங்கம் கூறுவதுபோல் மொழிப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் சிங்கள அரசாங்கம் எந்தளவு

## சப்ரா யுனிக்கோ பினான்ஸ் நிறுவனம்

# 187மில். ரூபாவை மீளளிக்க மத்தியவங்கி காலவரையறை

(கொழும்பு)

சப்ரா யுனிக்கோ பினான்ஸ் நிறுவனம் நிதி வாணிபத்தை நடாத்துவதற்கு வழங்கிய உரிமையை 02 08 93 ஆம் திகதி முதல் ரத்துச்செய்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. இது தொடர்பாக ஆகஸ்ட் 10-ம் திகதிய வர்த்தமானியிலும் பொது அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருக்கும் இலங்கை மத்திய வங்கி அதிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சிலபகுதிகளை கொழும்பிலிருந்து வெளியாகும் தினசரிகளிலும் பொது அறிவித்தல் மூலம் பகிரங்கப் படுத்தியுள்ளது.

வரையறுக்கப்பட்ட சப்ரா யுனிக்கோ பினான்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட நிதிவாணிப உரிமையை அகற்றுவதாகவும், வைப்பு பொறுப்புக்களை தீர்ப்பதற்காகவும் இலங்கை மத்திய வங்கி பணிப்புரை ஒன்றை விடுத்துள்ளது.

இக் கம்பெனியின் பதினெட்டுக்கோடியே எழுபத்திரண்டு இலட்சத்து நாலாயிரத்து எழுநூற்று நாற்பது ரூபா பதினெட்டுச் சதம் உடைய (ரூ. 187 224, 740. 18) பொறுப்புக்களை கொடுத்துத் தீர்க்க தொடங்க வேண்டும் எனவும், இதில் 10 27 கோடி ரூபாவுக்குக் குறையாதவொரு பணத் தொகையை செப்டெம்பர் 1-ம் திகதி முதல் அடுத்து வரும் பன்னிரண்டு மாதத்திலுள் நிலுவையாகவுள்ளவைப்புகளுக்கு விகித சமமாக அத்தையை வைப்பு முதிர்வடையும் ஒழுங்குவரிசைப்படி வைப்பவர்களுக்கு செலுத்த வேண்டுமெனவும்,

6 52 கோடி ரூபா பணத்தொகையை செப்டம்பர் 1-ம் திகதி முதல் 93 டிசம்பர் 31-ம் திகதிக்கு முன்பாக வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டுமெனவும், 2.45 கோடி ரூபா பணத்தொகையை 94 ஜனவரி 1-ம் திகதி -94 ஏப்பிரல் 30-ம் திகதிக்கு இடையிலான காலப் பகுதியில் செலுத்த வேண்டுமெனவும், 1 3 கோடி ரூபா பணத்தொகையை 94 மே1-ம் திகதி முதல் 94 ஆகஸ்ட் 31-ம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்

மேலும் 5.57 கோடி ரூபாவுக்கு குறையாத பணத்தொகையை 94 செப்டம்பர் முதல் திகதியிலிருந்து அடுத்த பன்னிரண்டு மாதங்களினுள் நிலுவையாகவுள்ள வைப்புகளுக்கு விகித சமமாக முதிர்வடையும் ஒழுங்கு வரிசைப்படி வைப்பாளர்களுக்கு செலுத்தப்படுதல் வேண்டுமெனவும்,

1.07 கோடிரூபா பணத்தொகையை 94 செப்ரெம்பர் முதல் திகதியிலிருந்து94டிசம்பர்31-ம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் வைப்பாளர்களுக்கு செலுத்துதல் வேண்டுமெனவும்,

4 5 கோடிரூபா பணத்தொகையை 95 ஜனவரி முதல் திகதியிலிருந்து 95 ஆகஸ்ட் 31-ம் திகதிக்கு இடையிலான காலப் பகுதிக்குள் வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டும் எனவும்,

95 செப்டம்பர் முதலாம் திகதியன்று நிலுவையாகவுள்ள மீதி வைப்புப் பொறுப்புக்களுக்கும் 187 224,740 ரூபாவான மொத்த வைப்பு பொறுப்புக்களின் மீது 93 யூலை முதல் திகதி வரையிலான ஒன்று திரண்ட வட்டியும், 1995 செப்டம்பர் முதலாம் திகதியிலிருந்து தொடங்குகின்ற பன்னிரண்டு மாதத்திலுள் செலுத்தப்படுதல் வேண்டுமெனவும், இலங்கை மத்திய வங்கியின் வங்கியில்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்து பணிப்புரை விடுத்துள்ளார்.

## ராஜீவ்காந்தி கொலைக்கான திட்டமிடலில்

# டே ஒப் த ஜக்கோல் நாவல் பயன்படுத்தப்பட்டது

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையாளிகள் தங்களது சதி திட்டத்தின் ஒரு பகுதியை பிரபல ஆங்கில புனைகதை ஆசிரியரான பிரெடரிக்ஃபோர்சைத்தின் 'டே ஓஃப் த ஜக்கோல்' என்ற நாவலில் தெரிவிக்கப்பட்டிருந்த யோசனையின் அடிப்படையிலேயே தீட்டியிருந்தனர் என்று ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணையின்போது அரச தரப்பு வழக்கறிஞரான ஆர். தினகர் குறிப்பிட்டார்.

சென்னை புறநகர் பகுதியில் உள்ள பூந்தமல்லி விசேட நீதி மன்றத்தில் தனது வாதத்தை நிகழ்த்திய தினகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1991 மே 21இல் சென்னைக்கு அண்மையாக இருக்கும் ஸ்ரீபெரம்புதூர் நகரில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுவதற்கு வருகை தந்தபோது பெண் ஒருத்தியின் தற்கொலை குண்டுத் தாக்குதலில் ராஜீவ்காந்தி பலியானார். ஆனால் இந்த முதல் கொலை முயற்சி தோல்வியடைந்திருக்குமேயானால் ராஜீவ் காந்தியைத் தீர்த்துக் கட்டுவதற்கு இன்னும் ஒரு சதித்திட்டத்தையும் திருந்தனர் அச்சதித்திட்டமே ஃபோர்சைத்தின் கதையை அச்சொட்டாக ஒத்ததாக இருந்தது என்று தினகர் நீதிமன்றில் கூறினார்.

ஃபோர்சைத்தின் நாவலில் ஓய்வுபெற்ற படை வீரர் பாத்திரம் ஒன்று இருந்தது. அந்தப் படைவீரர் ஒரு காலை இழந்தவர். முன்னாள் பிரெஞ்சு ஜனாதிபதி சார்ள்ஸ் டீகோலை கொலை செய்வதற்காக இந்த படை வீரர் தனது ஊன்று கோல்களில் ஒன்றை துப்பாக்கியை மறைத்து வைப்பதற்கு பயன்படுத்தினார். இக்கொலை முயற்சியில் அவர் தோல்வி கண்டதாகவே நாவலில் சித்திரிக்கப்பட்டிருந்தது. ராஜீவ்காந்தியின் கொலையாளிகளும் ஒரு காலையிழந்த கொலையாளியொருவரை கூலிக்கு அமர்த்தியிருந்தனர். ஸ்ரீபெரம்புதூரில் ராஜீவ் காந்தியை கொலை செய்வதற்கான முயற்சிதோல்வியடைந்திருக்குமேயானால், ஃபோர்சைதின் நாவலில் தெரிவிக்கப்பட்டிருக்கும் யோசனையின் பிரகாரம் ராஜீவை கொல்வதற்கான இரண்டாவது முயற்சி புதுடில்லியிலேயே மேற்கொள்ளப்படவிருந்தது.

புலிகள் இயக்கத்தைச்

# ஆலயம்மீதான தாக்குதல் காட்டுமிராண்டித் தனம்

— சன்மார்க்க சபை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அமைதியான முறையில் பக்தி பூர்வமாக நடைபெற்ற மகோற்சவத்தில் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு பக்தர்களை பலி கொண்டதும் ஆலயக் கட்டடங்களை சேதமாக்கியதுமான செயல்கள் மிகவும் அநாகரீகமானதும், வெறித்தனமானதும், மிருகத்தனமானதும் ஆகும் என்று குரும்பசிட்டி சன்மார்க்க சபை கூறியுள்ளது

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின்மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் தொடர்பாக அரசாங்க அதிபர் ஊடாக இந்து கலாசார இராஜாங்க அமைச்சருக்கு அனுப்பப்பட்ட கடிதமொன்றில் சன்மார்க்க சபையினர், மேலும் இக்காட்டுமிராண்டிச் செயலுக்கு பொறுப்பான, இப் பொறுப்பற்றவர்களை எமது சபை வன்மையாகக் கண்டிக்கிறது என்றும், வணக்கத்தலங்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் கண்மூடித்தனமான தாக்குதல்கள் சைவசமய கலாசாரத்தை திட்டமிட்டு அழிப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதை தெட்டத் தெளிவாக புலப்படுத்துகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழிளைஞர் ஒருவர் மட்டக்குளியில் கைது

(கொழும்பு)

ராஜீவ் காந்தி மற்றும் ரணசிங்க பிரேமதாசா கொலைகளுடன் சம்பந்தப் பட்டதாக கருதப்படும் முக்கியமான ஒருவரைப் பொலிசார் கைது செய்துள்ளதாகக் கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுரேஸ் சாள்ஸ் மற்றும் நிக்சன் என்றபெயர்களில் அழைக்கப்படும் அந்தச் சந்தேக நபரைக் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மட்டக்குளியில் ஒரு வீட்டில் கைது செய்ததாக நேற்றுக் கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்தன.

# சிறிமாவோ கருத்துக்கு நவசமசமாஜகட்சி எதிர்ப்பு

யுத்தத்தை தீவிரப்படுத்துவதற்காக விஜயதுங்க அரசிற்கு ஆதரவளிப்பதாக சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறியிருப்பதை நவசமசமாஜக் கட்சி வன்மையாக கண்டித்துள்ளது. இது தொடர்பாக அக்கட்சியின் அரசியல் குழு விடுத்த அறிக்கையில் ஜனகபுர இராணுவம் அண்மையில் புலிகளினால் தோற்கடிக்கப்பட்ட பின்னரே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார். அப்படியென்றால் வடபகுதிக்கு மேலும் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் சென்று செத்துமடிய வேண்டும் என்றும் தென்னிலங்கை மக்கள் மீது மேலும் சுமையை அதிகரிக்க வேண்டும் என விரும்புகிறாரா?

1983இல் 1.37பில்லியனாக இருந்த யுத்த செலவு 1993இல் 25 பில்லியனாகியுள்ளது. மறுபுறத்தில் தெற்கில் ஆயிரக்கணக்கில் இளைஞர்களும் யுவதிகளும் கைதாகின்றனர். இலங்கைக்கு இன்று வழங்கப்படும் வெளிநாட்டு நிதியுதவியின் ஒருபகுதி வடக்கு கிழக்கு யுத்தத்திற்கு குண்டுவீச்சுவிமானங்கள், இராணுவ உபகரணங்கள் போன்றவற்றை வாங்க பயன்படுவது பகிரங்க ரகசியம் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது

## பொருள்கள்

கப்பல் இன்று மிகுதியாக கப்பலில் தேங்கிக் கிடக்கும் மாவுடன் இத்துறைமுகத்திற்குவந்து சேரும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது

அதேசமயம் தனியாருக்கு ஆயிரம் மெட்ரிக் தொன் உரத்துடன் வந்து காங்கேசன் துறையில் தரித்து நிற்கும் 'ஓஸன் ரேடர்ஸ்' கப்பலும் நாளை 'வாஜவ' கப்பலுடன்

## வீரச்சாவு

விபத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் இரும்பொறையின் வித்துடல் இன்று பிற்பகல் 1.00 மணியளவில் வீட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கோண்டாவில் வாகீஸ்வரி சன சமூக நிலையத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பி.ப. 2 30 மணிக்கு ஐந்து சந்தி நாவலர் வீதியில் அமைந்துள்ள கார்த்திகா பாலர் பாடசாலையில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடாத்தப்பட்டு அதனைத் தொடர்ந்து பிற்பகல் 4 மணியளவில் நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள தீவகக்கோட்ட அரசியல் துறைச் செயலகத்தில் அமைக்

தீர்க்கப்பட்டு விட்டது என்பதே ஆகும். அதாவது 1978ஆம் ஆண்டு தமிழுக்கு தேசிய மொழி அந்தஸ்து வழங்கப்பட்டதன் மூலம் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது என்பதே ஆகும். இதனை அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா முதல் தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா வரை தெரிவிக்கின்றனர்.

ஆனால், தமிழரின் தேசிய இனப்பிரச்சினை என்பது சிங்கள ஆட்சியாளர்கள் கூறுவதுபோன்று ஒரு மொழிப் பிரச்சினையல்ல, அது ஓர் இனத்தின் பிரச்சினை. ஓர் இனத்தின் தாயகத்தோடும் அதன் மொழி, கலை, பண்பாடு போன்ற மூலக் கூறுகளோடும் மற்றும் சுதந்திரம், பாதுகாப்பு அதாவது வற்றோடும் தொடர்புடையன ஆகும். இதில் மொழி என்பது தமிழ் தேசியத்தின் ஓர் அலகே ஒழிய பிரச்சினையின் மொத்த வடிவமும் அல்ல.

இதில், இனப்பிரச்சினை என்பது தனியாக மொழி அல்ல என்பது ஒருபுறம் இருக்க, அரசாங்கம் கூறுவதுபோல மொழிப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் சிங்கள அரசாங்கம் எந்தளவு முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது? அவ்வாறு எடுத்திருக்குமானால் இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி பதினைந்து வருடத்தின் பின் இன்று தமிழ்மொழியை அமுலாக்குமாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிடம் நேரடியாக வேண்டுகோள்விடுக்க வேண்டிய அவசியம் வந்திராது.

சட்டங்கள் ஆக்குவதினால் மட்டும் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. சிறிலங்காவின் அரசியலமைப்பிலும் இலங்கையர் அனைவரும் சமமான உரிமை உடையவர்கள் என்றே தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இலங்கையிலுள்ள சிறுபான்மை இனங்களுக்கு பெரும்பான்மை இனம் சம உரிமைகளை வழங்கி விட்டதா? பல்கலைக்கழக அனுமதியில் இருந்து வேலை வாய்ப்பு வரை சம உரிமை உண்டா? அல்லது பெரும்பான்மை இனத்திற்குரிய பாதுகாப்புத்தான் சிறுபான்மை இனத்திற்கு உண்டா? அரசாங்கமே சிறுபான்மையினர் மீது பொருளாதாரத் தடையை விதித்துள்ளதோடு, தனது இராணுவத்தையும் ஏவி விட்டுள்ளது. இந்நிலையில், சகல பிரஜைகளுக்கும் சம உரிமை என்ற அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்துக்களால் பயன் என்ன?

இதேபோன்றே தமிழ்மொழிக்கும் தேசிய அந்தஸ்து வழங்கும் சட்டமுமாகும். தமிழுக்கு தேசிய மொழி அந்தஸ்து வழங்கப்பட்டு சுமார் 15 வருடகாலமாகியும் அது அமுலாக்கப்படவில்லை. அரசாங்கம் அதுகுறித்து அக்கறைகாட்டுவதாகவும் இல்லை. மாறாக, தென்னிலங்கையில் தற்பொழுது தமிழ் மொழி முன்னர் இருந்ததைவிட மோசமாக புறக்கணிக்கப்பட்டுவருகின்றது. உதாரணமாக, முன்னர் மும்மொழிகளில் இடம்பெற்ற பஸ்வண்டிகள் செல்லும் இடங்களைக் குறிப்பிடும் பெயர்ப்பலகை தற்பொழுது தனிச் சிங்களமாக மாற்றம் பெற்றுள்ளது. இதிலிருந்தே அரசின் தமிழ்மொழி அமுலாக்கலின் லட்சணம் தெரியவரும்.

இந்த நிலையில், இனப்பிரச்சினை இல்லை, மொழிப் பிரச்சினையும் தீர்க்கப்பட்டுள்ளது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடானது அரசின் போக்கில் இனவாத சிந்தனை வளர்ந்து செல்வதைக் காட்டுவதாகவுள்ளதே. இனப்பிரச்சினை தீர்வில் அரசு அக்கறை காட்டுவதைக் குறிப்பதாக இல்லை. அரசின் இந்த நடவடிக்கை ஒன்றே அதன் போக்கையும், நடவடிக்கையையும் விளங்கிக் கொள்ளப் போதுமானதாகும்.

வரும் பன்னிரண்டு மாதத்தினுள் நிலுவையாகவுள்ளவைப்புகளுக்கு விகித சமமாக அத்தகையை வைப்பு முதிர்வடையும் ஒழுங்குவரிசைப்படிவைப்பவர்களுக்கு செலுத்த வேண்டுமெனவும்,

6 52 கோடி ரூபா பணத்தொகையை செப்டம்பர் 1-ம் திகதி முதல் 93 டிசம்பர் 31-ம் திகதிக்கு முன்பாக வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டுமெனவும், 2.45 கோடி ரூபா பணத்தொகையை 94 ஜனவரி 1-ம் திகதி -94 ஏப்பிரல் 30-ம் திகதிக்கு இடையிலான காலப்பகுதியில் செலுத்த வேண்டுமெனவும், 1 3 கோடி ரூபா பணத்தொகையை 94 மே 1-ம் திகதி முதல் 94 ஆகஸ்ட் 31-ம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காந்தி கொலை வழக்கு விசாரணையின்போது அரச தரப்பு வழக்கறிஞரான ஆர். தினகர் குறிப்பிட்டார்.

சென்னை புறநகர் பகுதியில் உள்ள பூந்தமல்லி விசேட நீதி மன்றத்தில் தனது வாதத்தை நிகழ்த்திய தினகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1991 மே 21இல் சென்னைக்கு அண்மையாக இருக்கும் ஸ்ரீபெரம்புதூர் நகரில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுவதற்கு வருகை தந்தபோது பெண் ஒருத்தியின் தற்கொலை குண்டுத் தாக்குதலில் ராஜீவ்காந்தி பலியானார். ஆனால் இந்த முதல் கொலை முயற்சி தோல்வியடைந்திருக்குமேயானால் ராஜீவ் காந்தியைத் தீர்த்துக் கட்டுவதற்கு இன்னும் ஒரு சதித்திட்டத்தையும் கொலையாளிகள் தீட்டி வைத்

# பல்லேகலயிலிருந்து விடுதலையான 23 பேர்

(கொழும்பு)

கண்டி பல்லேகல இளைஞர் புனர்வாழ்வு முகாமிலிருந்து அண்மையில் 23 தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

புனர் வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா முன்னிலையில் இவர்கள் 23 பேரும் விடுதலை செய்யப்பட்டு அவர்களின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டனர். இவ்வாறு விடுதலையானோர் விபரம் வருமாறு:-

கனகசபை ராஜேந்திரன் வல்வெட்டித்துறை, செல்லையா துரைரத்தினம் காங்கேசன் துறை, வேலுசாமி சாந்தலிங்கம் தாவடியடி, வெள்ளிமயில் குணபாலசிங்கம் பருத்தித்துறை, தட்சணாமூர்த்தி திருஞானமூர்த்தி தாழையடி, திருவெங்கடேஸ்வரன் அன்பழகன் மாதகல், முருகேசு குமாரராயு அல்வாய், யூலியட் பிரங்லின் அல்வாய், கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் பருத்தித்துறை வேலுசாமி குவீந்திரன் வடக்கு தாவடியடி, மகாலிங்கம் பொன்னுத்துரை பருத்தித்துறை, செல்வக் கதிரமலை செல்வமனோகர் வல்வெட்டித்துறை பீட்டர் அருந்தவராஜா வல்வெட்டித்துறை, சாந்தலிங்கம் அருமைத்துரை வல்வெட்டித்துறை கி. அரியரட்ணம் இளவாலை, ஆசீர்வாதம் மரியசீலன் இளவாலை, சின்னத்தம்பி பாக்யராஜா மட்டக்களப்பு, அழகையா விஜேந்திரன் கோமாரி, தம்பிப்பா மகேந்திரன் காரைதீவு, குமாரசாமி சாந்தகுமார் தம்பிலுவில்லு, ஜேசுதாசன் கல்முனை, கணபதிப்பிள்ளை ரவீந்திரன் திருமலை.

பணம்

நேரத்தில் மேற்படி தமிழ்க்குழுவினரின் முகாமில் வைத்து தீவிரவிசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

மாவீரர்

நாட்டப்பட்டது

வடமராட்சியில் பல பகுதிகளுடாக ஊர்திசென்றுமாலை நாகர்கோவிலில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கல் நாட்டப்பட்டது.

இதேவேளை வன்னி மாவட்டத்தின் பலபகுதிகளிலும் இம் மாவீரர்உருவப்படம் தாங்கிய ஊர்தி ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது [24] [யோ]

ஒரு ஜனாதிபதி சார்ள்ஸ் டிகோலை கொலை செய்வதற்காக இந்த படை வீரர் தனது ஊன்று கோல்களில் ஒன்றை துப்பாக்கியை மறைத்து வைப்பதற்கு பயன்படுத்தினார். இக்கொலை முயற்சியில் அவர் தோல்வி கண்டதாகவே நாவலில் சித்திரிக்கப்பட்டிருந்தது. ராஜீவ்காந்தியின் கொலையாளிகளும் ஒரு காலையிழந்த கொலையாளியொருவரை கூலிக்கு அமர்த்தியிருந்தனர். ஸ்ரீபெரம்புதூரில் ராஜீவ் காந்தியை கொலை செய்வதற்கான முயற்சிதோல்வியடைந்திருக்குமேயானால், ஃபோர்சைத்தின் நாவலில் தெரிவிக்கப்பட்டிருக்கும் யோசனையின் பிரகாரம் ராஜீவை கொல்வதற்கான இரண்டாவது முயற்சி புதுடில்லியிலேயே மேற்கொள்ளப்படவிருந்தது.

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சகல தீவிரவாதிகளும் ஃபோர்சைத்தின் நாவலுடன் மிகவும் பரிச்சயமானவர்கள். அதை வாசிப்பது அவர்களிற்கு கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது என்றும் தினகர் தமது வாதத்தின் போது கூறினார்.

ராணுவ

ஏழை மாணவர்களின் கல்விக்குத் தடை ஏற்படுத்தப் பார்க்கிறது.

அரசு இலவசக் கல்வியை வழங்குவதென்றால் பல்கலைக் கழகங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் நிதிப் பொறுப்பிலிருந்து அரசு விலகியிருக்கக் கூடாது. பல்கலைக் கழகங்கள் தேவையான நிதியை சுயமாகத் திரட்ட வேண்டும் என்று அரசு வலியுறுத்துவது பல்கலைக் கழகங்களை நிதி அறவிடும் நிலைக்குத் தள்ளிவிடும் என்றார்.

உலக வங்கியின் இந்தத் திட்டம் ஏற்கனவே பாடசாலைகளில் செயற்படுத்தப்படுகிறது. பாடசாலை அபிவிருத்திச் சபைகள், பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் சம்பந்தப்பட்ட பாடசாலையின் அபிவிருத்திக்கும் பணம் உதவும்படி எதிர்பார்க்கப்படு

<table>
<tr><td colspan="5">

**உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்**

**31-08-93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10757

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

</td></tr>
<tr><td>26-7252,</td><td>41 6686,</td><td>40-0770,</td><td>24-2860,</td><td>26-5517</td></tr>
<tr><td>24-4367,</td><td>40-5216,</td><td>24-5955,</td><td>26-6461,</td><td>26 6075</td></tr>
<tr><td>24-5886,</td><td>28-1380,</td><td>28-2956,</td><td>40-7583,</td><td>27 9833</td></tr>
<tr><td colspan="5">வடபகுதிக்கு வெளியேசென்ற வாகன இலக்கங்கள்:</td></tr>
<tr><td>27-3946,</td><td>26 0535,</td><td>24-5418,</td><td>24-6448,</td><td>26-2502</td></tr>
<tr><td>27 6563,</td><td>27-2084,</td><td>41-9652,</td><td>27 7750,</td><td>27 9779</td></tr>
<tr><td>26 7068,</td><td>24-5029,</td><td>27 5449,</td><td>41-4129,</td><td>27-6821</td></tr>
<tr><td>42-2355,</td><td>28 9186,</td><td>24-4292,</td><td>26-5777.</td><td></td></tr>
</table>

வாறு கூறியிருக்கிறார். அப்படியென்றால் வடபகுதிக்கு மேலும் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் சென்று செத்துமடிய வேண்டும் என்றும் தென்னிலங்கை மக்கள் மீது மேலும் சுமையை அதிகரிக்க வேண்டும் என விரும்புகிறாரா?

1983இல் 1.37பில்லியனாக இருந்த யுத்த செலவு 1993இல்

பொருள்கள்

கப்பல் இன்று மிகுதியாக கப்பலில் தேங்கிக் கிடக்கும் மாவுடன் இத்துறைமுகத்திற்குவந்து சேரும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது

அதேசமயம் தனியாருக்கு ஆயிரம் மெட்றிக் தொன் உரத்துடன் வந்து காங்கேசன் துறையில் தரித்து நிற்கும் 'ஒஸன் ரேடரீஸ்' கப்பலும் நாளை 'வாதுவ' கப்பலுடன் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரலாம் எனவும் நம்பப்படுகிறது. கப்பலில் இருந்து பொருள்களை இறக்குவதற்கு ஏதுவா இறங்குதுறையில் வேண்டிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (யோ)

கிறார்கள் குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு அந்தப் பிரதேசத்தில் உள்ள தொழில் திறன்கள் போதிக்கப்படுகின்றன. இத்திட்டம் சர்வதேசபல் இன நிறுவனங்களின் தன்மை கருதியே நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்

பணக்காரப் பிள்ளைகள் பயிலும் பாடசாலைகளில் கம்பியூட்டர் பொறியியலும் மருத்துவம் சார்ந்த கல்வியும் கற்பிக்கப்படுகின்றன. ஆனால் ஏழைப் பிள்ளைகளுக்கு இந்த உரிமை மறுக்கப்பட்டு, அவர்கள் சிறிலங்காவில் முதலீடு செய்துள்ள பல இன நிறுவனங்களுக்கு அடிமைகளாக்கப்படுகிறார்கள் இவ்வாறு அவர் மேலும் கூறினார்

இயாகி

வதையும், வீண் விரயங்கள் ஏற்படுவதையும் தவிர்க்கும் அதேசமயம் அழகாகவும், புனிதமானதாகவும் பொதுப் பந்தல்கள் அமைக்கப்படுவதற்கும், கோவில்கள், தேவாலயங்கள் தவிர்ந்த பொதுமக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய இடங்களில் சிரமதானப் பணிகள்மேற்கொள்ளப்படுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

...டதப்பொருள்

தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், பாரபட்சமான முறையில் குறிப்பிட்ட சில இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கு உதவிப்பொருள்களை மேற்படி தொண்டர் நிறுவனம் வழங்கியுள்ளதாகவும் அம்மக்கள் வினாவெழுப்பியுள்ளனர் [09]

வீரச்சாவு

விபத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கப்டன் இரும்பொறையின் வித்துடல் இன்று பிற்பகல் 1.00 மணியளவில் வீட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கோண்டாவில் வாகீஸ்வரி சன சமூக நிலையத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பி.ப. 2 30 மணிக்கு ஐந்து சந்தி நாவலர் வீதியில் அமைந்துள்ள கார்த்திகா பாலர் பாடசாலையில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடாத்தப்பட்டு அதனைத் தொடர்ந்து பிற்பகல் 4 மணியளவில் நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள தீவகக்கோட்ட அரசியல் துறைச் செயலகத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து கோவில் வீதி, இராசபாதை வீதியூடாக கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இறுதி இராணுவமரியாதைகளுடன் புனித விதைகுழியில் விதைக்கப்படும்.

கடற்படை

பட்டதாகத் தெரியவருகிறது.

நேற்றுக்காலை 10 மணியளவில் கல்முனை பூநகரி கடற்பரப்பில் ரோந்திலீடுபட்டிருந்த வேளையே இப்படகுகள் இரண்டும் சிக்கியதாக தெரியவந்துள்ள. விமானப்படையின் புக்காரா விமானங்களும் உலங்கு வானூர்தி ஒன்றும் இப்படகுகள் மீட்கப்படும் வரை வான்பரப்பில் வட்டமிட்டு பாதுகாப்பில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பாவில்

திப்பின் போது இந்த அமைதித்திட்டம் புலிகளால் தம்மிடம் வழங்கப்பட்டதாக அமைச்சர் தொண்டமான் கூறியதாகவும் அரச சார்பு கொழும்புப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது,

பாரிஸில் புலிகளின் பிரமுகர் லோரன்ஸ் திலகருடன் அமைச்சர் தொண்டமான் நடத்திய பேச்சுகளின் விபரங்களை அமைச்சர் வெளியிடவில்லை என்றும் எனினும் தமது பேச்சுகளின் விபரங்களை விரைவில் அரசிடம் தெரிவிப்பார் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நிலவும் சூழ்நிலைகள் சாதகமாக உள்ளன சுமுகமாக பிரச்சினையை தீர்க்க சம்பந்தப்பட்ட கட்சிகள் இணக்கமான முடிவுகளை அவசியம் மேற்கொள்ளவேண்டும் என்றும் அமைச்சர் இது குறித்து கருத்து வெளியிடுகையில் தெரிவித்தார் என மேலும் டெய்லிநியூஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**LONDON ACCOUNTANCY CLASSES**

**MAY - JUNE 1994**

C.I.M.A. STAGE I
A.A.T. (London) PRELIM & INTER
A.A.T. (Srilanka) LEVEL I & II
I.A.B. FOUNDATION & INTER

**ஆரம்பம் 5-09-1993**

விபரங்கட்கு:

**North Ceylon Technical Institute**
(Result Oriented Institute in North)
14, St. PETERS LANE,
JAFFNA. (சி.7328)


# பாலஸ்தீனசுயாட்சிபிரதேசம் உருவாக இஸ்ரேல் இணக்கம்

(லண்டன்)

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காஸாவிலும் மேற்கு கரையிலும் பாலஸ்தீனர்களுக்கு சுயாட்சிப் பிரதேசம் வழங்கும் வகையிலான வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதிகளிலிருந்து இஸ்ரேல் இராணுவம் வாபஸ் பெறப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டது. இப்பகுதிகளிலிருந்து இஸ்ரேல் வாபஸானதும் இப்பகுதி பாதுகாப்பு பொறுப்பை பாலஸ்தீன விடுதலை இயக்கம் பொறுப்பேற்கும்.

அரபு-இஸ்ரேல் சமரசப் பேச்சில் இந்த இணக்கம் காணப்பட்டுள்ளதாக பாலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவித்தது. இது தொடர்பாக ஒப்பந்தம் கைச்சாத்தாகி 4 மாதங்களில் காஸாவிலிருந்தும் மேற்கு கரையிலிருந்தும் இஸ்ரேல் படை வாபஸாகும் என பாலஸ்தீன விடுதலை இயக்க தலைவர் யாசீர் அரபாத் தெரிவித்துள்ளார். இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட காஸா மேற்கு கரை பகுதிகளிலிருந்து இஸ்ரேல் வாபஸானதும் அப்பகுதியில் பாதுகாப்பை பொறுப்பேற்க பாலஸ்தீன விடுதலை இயக்கம் தயாராகிவருகிறது. அரபு நாடுகளில் பரவலாக செயற்பட்டுவரும் பாலஸ்தீன விடுதலை இயக்க பிரிவுகளை இதன் பொருட்டுஇவ்வமைப்பு புனரமைப்பு செய்ய ஆரம்பித்துள்ளது.

காஸா மற்றும் மேற்கு கரைப்பகுதிகளிலிருந்து இஸ்ரேல் வாபஸ்பெற்று அப்பகுதியில் பாலஸ்தீனருக்கு நாடு ஒன்று வழங்குவதற்கு பதிலாக பாலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேல் என்ற ஓர் நாடு உள்ளது என்பதை ஏற்கவேண்டும் என இஸ்ரேல் தரப்பில் கூறப்பட்ட நிபந்தனையை பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஏற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதுவரை இவ்வியக்கம் இஸ்ரேலை ஒரு நாடாக ஏற்றுக்கொள்ள மறுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை திலகன்**

[காசிலிங்கம் பிரபாகரன்]

(திருக்கோணமலை)

மலர்வு: 20-10-1974 வீரச்சாவு: 01-09-1989

புலரும் பொழுதுகள் 'இம் மண்ணில் முகாரி இசைத்திட புதுயுகம் காணத்துடித்திட்ட வேங்கையணி நின்று வித்தாகி வீழ்ந்திட்ட வித்தகனே திலகன் விடிகின்ற தேசத்தில் விருட்சமாய் எழுந்து நிற்பாய் என்பதனால் அடைகின்றோம் மன அமைதி.

மறவாமல் மனமுருகும்
பெற்றோர், சகோதரன்,
சகோதரிகள், உறவினர்,
நண்பர்கள்

பிரபாகரன் வீதி,
திருநெல்வேலி,
[யாற்பண்ணை.] (சி/7330)



**C. I. M.A. (Nov-1993)**

Free Seminar For All Students In Jaffna

கடந்தகால வினாத்தாள்களும் துரித மீட்டல் வகுப்புகளும்.

**ஆரம்பம் 18-9-1993**

விபரங்கட்கு:

**North Ceylon Technical Institute**
(Result Oriented Institute in North)
14, St. PETERS LANE,
JAFFNA. (சி/7327)


## 1 வயதுக்கு

குழந்தைகளுக்குக்கூட பல் வேறுவிதமான பால்மா வகைகளை தாய்மார் கொடுப்பது பற்றி கவனத்தில் எடுக்கப்பட்டது.

வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் இவ்வகையான பாலுணவுப் பொருட்களுக்கு செய்யப்படும் விளம்பரம் இதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம் எனக் கருதப்படுவதாலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.


# பொது அறிவித்தல்

**யாழ். மாநகரசபை**

31-12.1992 வரையான காலப்பகுதிக்குரிய சோலைவரியை இதுவரை செலுத்தாதவர்கள் தயவுசெய்து கூடியவிரைவில் செலுத்தி மேல் நடவடிக்கையைத் தவிர்த்து சபையுடன் ஒத்துழைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 27-08-1993.

[சி-7323]



## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 23-01-1972 வீரச்சாவு: 01-09-1990

**2-ம் லெப். கனோஜி**

கண்ணே நீ எனக் காத்திருந்தோம்
மண்ணே உயிரென நீயும் சென்றாய்
விண்ணே அதிர்ந்திடப் போர் தொடுத்தாய்
கனோஜி எனும் பெயரும் கொண்டாய்.
வன்னியில் போர்க்கொடி தூக்கி நின்றாய்
வசந்தங்கள் யாவையும் மறந்து நின்றாய்
அன்னியப் படைதனை அகற்றுதற்காய்
இன் உயிர் தனையும் நீ ஈந்து விட்டாய்
புத்தொளி பெற்றதோர் புலியானாய்
புனிதப்போர் நிகழ்த்திடும் அணியானாய்
நற்றமிழ் மண்ணிற்கு விதையானாய்
நம்மின வாழ்விற்கும் வழி சமைத்தாய்.



## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி - யாழ்.

யாழ்/ பல்கலைக்கழகத்திற்கான வெளிவாரி விரிவுரைகள்

B.A. Part - I
B.Com. Part - I

G. A. Q. 1st in Com.
பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான விரிவுரைகள்.

**ஆரம்பம் 4-09-93**

காலை - 8 மணி.

(சி-7314)



உ

**நாவலர்**

கல்விக் கழகம்

**ஆண்டு-4**

புலமைப் பரிசில்

பரீட்சை


## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னலிங்கம்

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி அன்னலிங்கம் 31-8-93-ல் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. அன்னலிங்கத்தின் அன்பு மனைவியும், சந்திரசேகரம்பிள்ளை (கனடா), டாக்டர் ஆனந்தராசா (U.S.A), சாரதாதேவி, ரதி(கனடா), பவானி (கனடா), புண்ணியமூர்த்தி (கனடா), சிறீகரன் (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம், 3-ம் வருடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாக்கியநாதன், மோகன் (கனடா), சிவசுப்பிரமணியம் (கனடா), சாந்தசெகரூபி (கனடா) லக்ஷி (U S A) ஆகியோரின் அன்பு மாமியும், விமல்,

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி - யாழ்.

யாழ்/பல்கலைக்கழகத்திற்கான வெளிவாரி விரிவுரைகள்

**B.A. Part - I**

**B.Com. Part - I**

G. A. Q. 1st in Com.

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான விரிவுரைகள்.

**ஆரம்பம் 4-09-93**

காலை - 8 மணி.

(சி-7314)



SPECIAL

## SPOKEN ENGLISH

ஆரம்ப எழுத்துக்களிலிருந்து ஆங்கில உரையாடல் வரை கற்பிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்கு பயிற்சியளிக்கப் படும். முன் அனுபவம் தேவை இல்லை.

**SYLLABUS**

1. BASIC GRAMMAR
2. READING
3. WRITING
4. VOCABULARY
5. CONVERSATION
6. ETIQUETTE

Lectures by: Mr. A. RAJAGOPALAN
Mr. SAM SOMASUNDARAM

**ஆரம்பம்: 06-9-93**

நேரில் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கவும்.

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி (அருச்சுனா வீதி) - யாழ்ப்பாணம்.

(றெயில்வே கடவை அருகாமை - மேல்மாடி) [சி-7321]



யாழ் நகர் **ஸ்ரீதர்** திரையரங்கில்

## "Battle of the Bulge"

**பல்ஜ்சமர்**

(தமிழாக்கம்)

டாங்கிகள் மூலம் மோதிக்கொள்ளும் பயங்கர சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மணி,

மாலை 4.00 மணி, 6.00 மணி (சி-7114)


பிறப்பு: 23-01-1972



வீரச்சாவு: 01-09-1990

## 2-ம் லெப். கனோஜி

கண்ணே நீ எனக் காத்திருந்தோம்
மண்ணே உயிரென நீயும் சென்றாய்
விண்ணே அதிர்ந்திடப் போர் தொடுத்தாய்
கனோஜி எனும் பெயரும் கொண்டாய்.
வன்னியில் போர்க்கொடி தூக்கி நின்றாய்
வசந்தங்கள் யாவையும் மறந்து நின்றாய்
அன்னியப் படைதனை அகற்றுதற்காய்
இன் உயிர் தனையும் நீ ஈந்து விட்டாய்
புத்தொளி பெற்றதோர் புலியானாய்
புனிதப்போர் நிகழ்த்திடும் அணியானாய்
நற்றமிழ் மண்ணிற்கு விதையானாய்
நம்மின வாழ்விற்கும் வழி சமைத்தாய்.
களத்தினில் வீழ்வதும் வீரமடா - உன்
உளத்தினில் உதித்ததும் தீரமடா - நீ
நிலத்தினில் சிந்திய உதிரமடா
நிச்சயம் ஈழமாய் உதிக்குமடா.

[இவருடன் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட ஏனைய 36 போராளிகளுக்கும்]

– குடும்பத்தினர்

(சி/7331)

வேறுவிதமான பால்மா வகைகளை தாய்மார் கொடுப்பது பற்றி கவனத்தில் எடுக்கப்பட்டது.

வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் இவ்வகையான பாலுணவுப் பொருட்களுக்கு செய்யப்படும் விளம்பரம் இதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம் எனக் கருதப்படுவதாலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.


உ

**நாவலர்**

கல்விக் கழகம்

## ஆண்டு - 4

புலமைப் பரிசில்

**பரீட்சை**

**(1994)**

புதிய வகுப்பு

ஆரம்பம்

**02-09-1993**

ஆனைப்பந்தி,

யாழ்ப்பாணம். [சி-7308]



வாடிக்கையாளர்களே !

**இதோ ஓர் நற்செய்தி**

## இன்று முதல் மாதாந்த பரிசுத் திட்டம்

ரூபா ஐநூறு பெறுமதிக்கு மேல் ஒரே தடவையில் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களிலிருந்து வழங்கப்படும் பரிசுச் சிட்டைகளின் மாதாந்த சீட்டிழுப்பில் மூன்று பரிசுகள் வழங்கப்படும்.

**1-ம் பரிசு ரூ. 2500/-** பெறுமதியான பொருள்கள்

**2-ம் பரிசு ரூ. 1500/-** பெறுமதியான பொருள்கள்

**3-ம் பரிசு ரூ. 1000/-** பெறுமதியான பொருள்கள்

பொருள்கள் பரிசு பெறும் வாடிக்கையாளர் தெரிவுசெய்யலாம்.

எப்பொருள் வேண்டினும் அப்பொருள் வேண்டிட

# எழிலகம்

(பகுதி கடை தொகுப்பு)

(Departmental Store)

**மணிக்கூட்டு வீதி — யாழ்ப்பாணம்**

எழிலகத்திலும், சார்ந்த நிறுவனங்களிலும் சேவையாற்றும் ஊழியர்களும் குடும்பத்தினரும் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

(7326)


பாய் என்பதனால் அடைகின்றோம் மன அமைதி.

மறவாமல் மனமுருகும்

பிரபாகரன் வீதி,
திருநெல்வேலி.
[யாழ்ப்பாணம்.] (சி/7330)

பெற்றோர், சகோதரன்,
சகோதரிகள், உறவினர்,
நண்பர்கள்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னலிங்கம்

கொண்டாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி அன்னலிங்கம் 31-8-93-ல் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. அன்னலிங்கத்தின் அன்பு மனைவியும், சந்திரசேகரம்பிள்ளை (கனடா), டாக்டர் ஆனந்தராசா (U.S.A), சாரதாதேவி, ரதி(கனடா), பவானி (கனடா), புண்ணியமூர்த்தி (கனடா), சிறீகரன் (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம், 3-ம் வருடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாக்கியநாதன், மோகன் (கனடா), சிவசுப்பிரமணியம் (கனடா), சாந்தசெகரூபி (கனடா) லக்ஷி (U S A) ஆகியோரின் அன்பு மாமியும், விமல், கோஷியா, அனோஜன், தனுஜா, விநோத், நிவே, ஜான்சினி, ஜனகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (1-9-93) இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர், தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
V. M. பாக்கியநாதன்
(மருமகன்)
சிறீகரன்
(மகன்)

கொண்டாவில் மேற்கு.

(5810)

## திரு. சின்னத்துரை சந்திரசேகரம் (ராசு)

கச்சேரியடியைச் சேர்ந்த திரு சின்னத்துரை சந்திரசேகரம் (31-08-93) நேற்று காலமானார். இவர் வரதலட்சுமியின் அன்புக் கணவரும், இரவிசங்கர் (U.K), உதயசங்கர் (U.K), சிறீதரன் (கனடா), பாலச்சந்திரன் (U.K), பிறேமகாந்தன், காலஞ்சென்ற இராஜேஸ்வரன், அனுஷ்யா (சுண்டிக்குளி மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற இரத்தினம், சின்னம்மா, பரமேஸ்வரி ஆகியோரின், சகோதரரும், இ. வதனி, உ. யோகவாணி, இரமணா, பாலசுந்தரம் (சாவகச்சேரிக் கோட்டம்), தேவதாஸ், காசிநாதன், சிறீகாந்தன் (I. C. R. C), தேவஞானி, சுசீந்திரன் (மக்கள் வங்கி), சுகந்தி, சுமந்திரன் ஆகியோரின் மாமனும், ரங்கன், சித்திரா, இந்திரன் ஆகியோரின் சிறிய தகப்பனாரும் சி. கந்தசாமி (இளைப்பாறிய நீதிமன்ற முதலியார்), காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், இ. டினேஷ், இ. றொமேஷ், உ. பிரசாந், உ. சிந்துஜா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் (1-09-93) இன்று புதன்கிழமை நடைபெற்று தகனக் கிரியைக்காக பிற்பகல் 3-30 மணியளவில் கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

16/1, கச்சேரி நல்லூர் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (5812)

ச. பிறேமகாந்தன்
(மகன்)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.